ஓம்

# ஸ்ரீ ராமகிருஷ்ண
# பஜனாவளி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் :: கொழும்பு - 6.

[illegible]

ஸ்ரீ:

# ஸ்ரீ ராமகிருஷ்ண

# பஜனாவளி

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமம்
வெள்ளவத்தை, கொழும்பு-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Published by*
RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
RAMAKRISHNA ROAD, COLOMBO - 6.

First Edition 1960 — 2000 Copies
Second Revised Edition 1963 — 2000 Copies
Third Revised, & Enlarged Edition 1966 — 2000 Copies
Fourth Revised Edition 1969 — 2000 Copies

*Printed at*
*Avra Printing Works, Colombo-11.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வளரும் குழந்தை உள்ளங்கள் நெறியறிந் தொழுக வழி காட்டப்பட வேண்டியது அவசியம். நல்ல சூழ்நிலையும் நல்லார் சேர்க்கையும் மனப் பண்பாட்டுக்கு உதவியளிப்பன. இத்தகைய சூழ்நிலையைச் சிறுவர் சிறுமியருக்கு ஆக்கித்தந்து, அவர்கள் உள்ளத்திலே சமய ஞானத்தை ஊட்டி, அதை நடைமுறையில் அனுஷ்டித்து, பிற்காலத்தில் அவர்கள் பெருமக்களாக வாழ வழி காட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம் கடந்த பத்து ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமை தோறும் சமய பாட வகுப்புகள் நடத்தி வருகிறது.

மாணவர்களுக்கு இளம் பிராயத்திலே உயர்ந்த கருத்துக்களை எளிய முறையில் ஊட்டுதல் மிகவும் அவசியமாகும். இதற்குப் பக்திரசம் ததும்பும் இனிய பாடல்கள் பாடுவது ஒரு சிறந்த சாதனமாகும். மனத்தை ஒருமுகப் படுத்தித் தூய்மையாக்க இப் பாடல்கள் பெரிதும் பயன் படுகின்றன. பலர் ஒருமுகமாகச் சேர்ந்து ஆண்டவன் நாமத்தை பண்ணுடன் பாடும்போது மனதிலே ஒரு அலாதியான சாந்தி நிலவுவதைக் காண்கிறோம். இதற்காகத் தான் கூட்டுப் பிரார்த்தனை முறைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு யாவரும் ஒருமிக்கச் சேர்ந்து பாடப் பயன் படும்படியாக ஒரு புத்தகம் இல்லாக் குறையை நிவர்த்தி செய்யு முகமாக, ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில் ராமகிருஷ்ண மிஷன் ஒரு பஜனாவளியை வெளியிட்டது. இந்நூல் மாணவர்க்கு மாத்திரமன்றிப் பக்தர் அனைவருக்குமே பயன் படுவதாயிற்று. இதனது இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளியாகிறது இதில் முதற் பதிப்பிற் சேராத உள்ளங்களைக் குழையச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில திருவாசகங்கள் தேவாரங்கள் பன்னிரு திருமுறைகளி லுமிருந்து தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆத்ம சாதகர்கள் தினமும் பாராயணம் பண்ணிப் பெரும் பயன் அடையத் தகுந்த சில உபநிஷத வாக்கியங்களும் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளன. இந் நூல் ஆத்மீக நாட்டமுடை யார் அனைவருக்கும் பயன் விளைக்குமென நம்புகிறோம்.

சுபகிருது ஞு மாசி மீ
13-ம் திகதி
(25—2—63)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
ஆஸ்ரமம்
கொழும்பு.

---

## மூன்றும் பதிப்பின்

# முன்னுரை

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது இன்னருளால் இம் மூன்றும் பதிப்பு புதிய உருவில் வெளி வரு கின்றது. பாலர் முதல் விருத்தர் வரை உபயோகிக்கத் தக்க படி பஜனைப் பாடல்கள், தோத்திரங்கள், கீர்த்தனங்கள், நாம ஸங்கீர்த்தனங்கள் உட்பட பன்னிரு திருமுறைப் பாடல் களும் திவ்ய பிரபந்தப் பாசுரங்களும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது இப் புதிய பதிப்பு.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சென்ற பதினன்கு ஆண்டு களாக நடத்தி வரும் சமய பாடசாலை மாணவ மாணவி களின் உபயோகத்திற்காகவே இப் பஜனாவளி தோன்றலா யிற்று, சமய பாடசாலையில் போதிக்கப் படுபவைகளும் இதில் இடம்பெறுகின்றன. மாணவ, மாணவிகள் மனனம் செய்து பெரும் பயன் எய்தத் தக்க வழியில் ஸ்ரீ மணிவாசகப் பெருமானின் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை களுடன், ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய சகலகலாவல்லி மாலையும் இதில் இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய பதிப்பிலுள்ள சில பாடல்களுக்குப் பதிலாக புதியவைகளையும், ஏனைய மொழிகளிலுள்ள சில பாடல்களையும் ஈண்டு சேர்த்துள்ளோம். இந் நூலில் ஸங்கீத நாட்டமுடையார்க்கும் உதவும் வகையில் அரிய பல ஸாஹித்யங்களும், கீர்த்தனங்களும் அடங்கி உள்ளன. மேலும் ஆத்மீய ஸாதகர்களுக்கான வேத சாந்தி பாட்டங்கள், ஸ்லோகங்கள், பிரார்த்தனைகள் – ஆகிய பாராயணத்துக்கான பகுதிகள் இடம் பெறுவதால் இஃது யாவர்க்கும் உரிய நூலாகும் என நம்புகிறோம். வடமொழிப் பதங்களை சரிவர உச்சரிக்க உதவும் வகையில் குறி விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் இணைந்துள்ள பாடல்களுக்கு உரிய கர்த்தாக்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இந் நூலால் யாவரும் பெரும் பயன் அடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வேண்டுகின்றோம்.

பராபவ ஷ ஐப்பசி மீ
7-ம் திகதி
ஸ்ரீ விஜயதசமி
( *23–10–1966* )

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
ஆச்ரமம்
கொழும்பு.

---

## நான்காம் பதிப்பு

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரது இன்னருளால் மூன்றாம் பதிப்பில் உள்ளவைகளே சில திருத்தங்கள் மாற்றங்களுடன் நான்காம் பதிப்பாக வெளி வருகின்றது.

கீலக ஷ மாசி மீ
7-ம் திகதி
ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி
( *18–2–1969* )

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
ஆச்ரமம்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமொழி சொற்களுக்குக் குறிவிளக்கம்

எல்லா ''ஒலி''களையும் குறிக்கத் தகுந்த எழுத்துக்கள் (வடமொழியில் உள்ளதுபோல்) தமிழில் கிடையாது. எனவே, வடமொழிப் பதங்களின் உச்சரிப்பு கூடுமான வரை சுத்தமாகவும் சுலபமாகவும் இருக்கும் பொருட்டு **தடித்த** கொட்டை எழுத்துகளையும் கிரந்த எழுத்துகளையும் கீழே விளக்கியபடி உச்சரித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **க** | **க**ங்**கை** | என்பதில்போல | Ga |
| **ட** | கு**ட**ம் | ,, | Da |
| **த** | பா**த**ம் | ,, | Da |
| **ப** | இன்**ப**ம் | ,, | Ba |
| **ச** | பா**ச**ம் | ,, | Sha |
| ஷ | விஷம் | ,, | Sha |
| ஸ | ஸர்ப்பம் | ,, | Sa |
| ஹ | ஹரி | ,, | Ha |
| க்ஷ | க் + ஷ என்பது | — | Ksha |

' (அ) S என்பது ''அ'' வாக- தொக்கி நிற்கும்.

**ச** என்ற இந்த **தடித்த** எழுத்தை ஸ வுக்கும் ஷ வுக்கும் நடுவில் உச்சரிக்க வேண்டும். இதன் கிரந்த எழுத்து ஶ — சிங்களத்திலும் 'ශ' உபயோகப்படுவது குறிப்பிடத்தக்கது. **சிவ** என்பதை Chiva என்பதாக உச்சரிப்பது தவறு. அது Shiva என்பதுபோல் உச்சரிக்கப்பட வேண்டும். தடிப்பில்லாமல் சாதாரண ச வாக இருந்தால் அதை வழக்கம்போல் உச்சரிக்க வேண்டும். (சக்கரம் என்பதுபோல).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை ... ... ... ... ... | iii |
| | வடமொழி சொற்களுக்குக் குறிவிளக்கம் ... | vi |
| 1. | ஸ்ரீ கணேசர் ... ... ... ... | 1 |
| 2. | ஸ்ரீ குருதேவர் ... ... ... ... | 11 |
| 3. | ஸ்ரீ ராமகிருஷ்ணர் ... ... ... | 14 |
| 4. | ஸ்ரீ சாரதா தேவியார் ... ... ... | 37 |
| 5. | ஸ்ரீ விவேகானந்தர் ... ... ... ... | 46 |
| 6. | ஸ்ரீ சிவபெருமான் ... ... ... ... | 54 |
| 7. | ஸ்ரீ சக்தி ... ... .. ... ... | 113 |
| 8. | ஸ்ரீ முருகன் ... ... ... ... | 131 |
| 9. | ஸ்ரீ ராமன் ... ... ... ... | 151 |
| 10. | ஸ்ரீ கண்ணன் ... ... ... ... | 173 |
| 11. | ஸ்ரீ நாராயணன் ... ... ... ... | 189 |
| 12. | ஸ்ரீ திவ்யப் பிரபந்தம் ... ... ... | 193 |
| 13. | ஸ்ரீ புத்த பகவான் ... ... ... | 211 |
| 14. | ஸ்ரீ இயேசுநாதர் ... ... ... ... | 215 |
| 15. | மங்களம் ... ... ... ... ... | 218 |
| 16. | சிங்களத் துதிப் பாடல்கள் ... ... ... | 220 |
| 17. | அனுபந்தம் 1. (வேத சாந்தி பாட்டம்) ... | 225 |
| | 2. (பிரார்த்தனை) ... ... | 227 |
| 18. | முதற்குறிப்பகராதி ... ... ... | 230 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்திற்கு மூலமும் முடிவும் அவனே என்பதை அறியப் பெறுவோம். குணக்குன்றும், பாபநாசனும், தர்மத் திற்குத் தாயகமும் அவனேயாம். நித்தியனும், ஜகத்தின் ஆதார புருஷனும் அவனேயாவான். மாயாதீதனும், காலம் கடந்தவனும், நாமரூப ரகிதனுமாகப் போற்றப்படும் அப் புராண புருஷன், நமது உள்ளத்தினையே உறைவிடமாகக் கொண்டுள்ளான்.

தேவதேவன், ஆதிநாயகன், முழுமுதற்பொருள், பிர பஞ்சாதீதன் என்று புகழப்படும் புண்ணிய மூர்த்தியை நாம் எய்துவோமாக.

வேண்டுதலற்று, கருவிகரணமற்று, ஒப்பாரும் மிக்கா ருமற்று ஒரு தனி முதல்வனுன அவன், அறிவையும் ஆற்றலையும் உருவமாகக் கொண்டுள்ளான். அவனது ஆற்றலின் பெருமையையே வேதம் விளம்புகின்றது.

— **உபநிஷதங்கள்.**

---

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவிர்
  ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணு ஹுதம் ।
ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம்
  ப்ரஹ்மகர்ம ஸமாதினு ॥

— **ஸ்ரீமத் பகவத் கீதை, 4–24.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேச ஸ்தோத்ரம்

ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ।
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்-ஸர்வ விக்னோப சாந்தயே ॥

நமோ விக்ன-ஸ்வரூபாய நமஸ்தே விக்ன-ஹாரிணே ।
நமஸ்தே ஸர்வரூபாய ஸர்வ-ஸாக்ஷிந்-நமோऽஸ்து தே ॥
நமஸ்தே பக்தவரத ஸர்வ-தாத்ரே நமோ நம: ।
நமஸ்தேऽனன்ய-சரண ஸர்வ காம-ப்ரபூரக ॥

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்ய-கோடி-ஸம-ப்ரப ।
நிர்விக்னம் குரு மே தேவ சுபகார்யேஷு ஸர்வதா ॥

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பு பலஸார பக்ஷிதம் ।
உமாஸுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம் ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதா கராத்த-மோதகம் ஸதா விமுக்தி-ஸாதகம்
கலாதரா வதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம் ।
அநாயகைக நாயகம் விநாசிதேப-தைத்யகம்
நதாசுபாசு-நாசகம் நமாமி தம் விநாயகம் ॥

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ர-மக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் ॥

— ஸ்ரீ கணேச பஞ்ச ரத்னம்.

---

ராகம்—நாட்டை | தாளம்—ஆதி

2. மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர ।
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே ॥

ராகம்—பூபாளம் | தாளம்—ஆதி

3. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

ராகம்—நாட்டை | தாளம்—ஆதி

4. கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே !

---

ராகம்—ஆனந்தபைரவி தாளம்—ஆதி

5. உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என் றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே !

---

ராகம்—பிலஹரி பல்லவி தாளம்—ஆதி

6. சித்தி விநாயகனே உந்தன்
செஞ்சரணமலரைத் தஞ்சமென்று நம்பினேன் (சித்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

சத்தியம் கயற்கண்ணி சந்நிதிக் கெதிர்சூழும்
வர்த்தனை மிகும் பொற்றாமரைக் கரைதனில் வாழும்(சி)

சரணம்

கோலப்பணிலந் திகழ் நீலத்திரை கடல்சூழ்
ஞாலத் தந்தணர் மறையா லெப்பொழுதும் மலர்
கோலிப் பூசை புரியும் மூலப்பொருளே - அனு
கூலப் பலன் தந்தெனைப் பாலித்தருள்புரிவாய் (சி)

— கவிக்குஞ்ஜர பாரதியார்.

---

ராகம்—நாட்டை பல்லவி தாளம்—ஆதி

7. ஸ்ரீ கஜநாத மஹாப்ரபு சரணம்
ஸஜ்ஜனகண பூஜிதனே சரணம் (ஸ்ரீ)

அனுபல்லவி

நிஜானந்தனே சங்கரர் பூஜிக்கும்
நிர்விகாரனே ஓடிநீ வாவா (ஸ்ரீ)

சரணம்

மூலாதாரனே முகுந்தனின் மருகா
நாலா வேதப் பொருளே அருளே
நீலகண்டர்மகிழ் தேவி லலிதையுடன்
நித்யானந்தனே முருகனுடனே வா (ஸ்ரீ)

---

ராகம்—ஹம்ஸத்வனி பல்லவி தாளம்—ஆதி

8. கருணை செய்வாய் கஜவதனா
கானரஸம் பொங்கும் ஞானவரம்தந்து (கருணை)

அனுபல்லவி

அருளோங்கும் சுத்த சக்தி சிவகாமி
அம்பிகை ஸுதனே நம்பினேன் உனையே (கருணை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

தீங்கனி பாகு தேன் சேரமுதம்
திருமுன் படைத்து சரணம் புகுந்தேன்
ஓங்கார விநாயக விக்ன ராஜா
உயர்வான வெற்றி அருளும் கணேசா ! (கருணை)

---

**ராகம்—திலங்க்** **பல்லவி** **தாளம்—ஆதி**

9. ஸ்ரீ கணேச சரணம் கஜானன
தேவர் முனிவர் பணியும் தயாகர (ஸ்ரீ)

**அனுபல்லவி**

நாகாபரணனே நான்மறை போற்றும்
நாமனே ப்ரணவ ரூபனே ஜய (ஸ்ரீ)

**சரணம்**

பாதம் நம்பும் ராமதாஸ வரதனே
மோதக ப்ரியனே கௌரீ ஸுதனே
ஆதிதேவன் உனதின்னருள் இலையேல்
வேதனும் மாலும் செய்தொழில் உண்டோ? (ஸ்ரீ)

---

**ராகம்—ஸிம்மேந்த்ரமத்யமம்** **தாளம்—ஆதி**

**பல்லவி**

10. மூவுலகம் தொழும் மூஷிக வாஹனனே
நான்மறைகள் போற்றும் ஞான முதல்வனே ! (மூவு)

**அனுபல்லவி**

பாவலர்கள் பாடப் பணிப்போனே இந்தப்
பாரினில் பரம்பொருளாய் ஒளிர்வோனே இந்த (மூவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

உலகுள் ஒளியாய் ஒளிரும் குருவே
உடலுள் உயிராய் உறையும் துணிவே
நிலத்தில் நிலையாய் நிலைக்கும் திருவே
கனிவோ டணைத்தே காக்கும் கனலே (மூவு)

— லலிதகானம்.

### நாமாவளிகள்

11. பாஹி பாஹி கஜானனு பார்வதி புத்ரா கஜானனு
மூஷிக வாஹன கஜானனு மோதக ஹஸ்தா கஜானனு
சாமர கர்ணு கஜானனு விளம்பித ஸூத்ரா கஜானனு
வாமன ரூபா கஜானனு மஹேச்வர புத்ரா கஜானனு
விக்ன விநுயக கஜானனு பாத நமஸ்தே கஜானனு

---

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச —பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச —ரக்ஷமாம்

கஜமுக கணபதி கணநாதா—விக்ன விநாயக குணநீதா

---

கணபதி கணபதி பாலய மாம்
கெளரீ தனயா பாலய மாம்
கெளரீ நந்தன கஜவதனு
கணேச வரதா மாம் பாஹி
கஜமுக கஜமுக கணநாதா
கணேச வரதா மாம் பாஹி
கஜானனு ஓம் கஜவதனு
கஜமுக வரதா மாம் பாஹி
பக்தஜன ப்ரிய கஜானனு
பார்வதி புத்ரா மாம் பாஹி
பாஹி பாஹி கஜானனு
பார்வதி நந்தன மாம் பாஹி

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமாவளி

கணநாதம் கணநாதம்—சிவ
கணபதிம் பஜரே குணநாதம் (கண)

கணநாதம் கணநாதம்
பஜரே மனஸா ஸதாநித்யம் (கண)

கணநாதம் கணநாதம்
ஈச்வர புத்ரம் கணநாதம்—பஜே (கண)

விக்ன விநாயக கணநாதம்
ஸித்தி விநாயக கணநாதம்—பஜே (கண)

பார்வதி புத்ரம் கணநாதம்
முக்தி ப்ரதாயக கணநாதம்—பஜே (கண)

மூஷிக வாஹன கணநாதம்
மோதக ஹஸ்த கணநாதம்—பஜே (கண)

சிவசிவ கஜமுக கணநாதம்
சிவகண வந்தித குணநாதம்—பஜே (கண)

புத்தி ப்ரகாசக கணநாதா
ஸித்தி விதாயக கணநாதா (கண)

வாவா வாவா அங்குச பாசா
வந்தருள் இன்பந் தந்திடு நேசா (கண)

உமைதரு பாலா குரு மணியே
உந்த னடைக்கலம் அடியோனே (கண)

மஹா கணபதே குரு சரணம்
மனம் மகிழ்ந்து வந்தருள் சரணம் (கண)

சரணம் சரணம் தன்திமுகா
சரவண பவனுக்கு உயர்துணைவா (கண)

சரணம் சரணம் ஸித்தி விதாதா
சரணம டைந்தவர்க் கருள்புரி வாவா (கண)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் சக்தி சொரூபா
சரணம டைந்தார்க் கருள் துணைவா (கண)

உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பத்மம் (கண)

---

ராகம்—இந்துஸ்தானி ராகம்—பைரவ் தாளம்—ஆதி

12. கணேச கஜமுக ஸித்தி விதாயக ।
கிரீந்த்ர நந்தினி நந்தன நாயக ॥
ஜினி நவாருண ஸிந்தூர சோபன,
லம்போதர தனு ஜகஜன மோஹன ।
அபீஷ்ட தாயக விக்ன விநாசக,
ப்ராதஃ ஸ்மரரே தேவ விநாயக ॥

---

ராகம்—மோஹனம் இந்துஸ்தானி ராகம்—பூபாலி தாளம்—ஆதி

13. காயியே கணபதி ஜகவந்தன,
சங்கர ஸுமன பவானீ நந்தன ॥ (கா)
ஸித்தி ஸதன கஜ வதன விநாயக,
க்ருபா ஸிந்து ஸுந்தர ஸப லாயக ॥ (கா)
மோதக-ப்ரிய முத மங்கள தாதா,
வித்யாவாரிதி புத்தி விதாதா ॥ (கா)
மாங்கத துலஸீதாஸ கரஜோரே,
வஸம்ஹி ராம்ஸியா மானஸ மோரே ॥ (கா)

— ஸ்ரீ துளஸிதாஸர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—நாட்டை  **பல்லவி**  தாளம்—சதுஸ்ர ஏகம்

14. மஹா கணபதிம் மனஸா ஸ்மராமி
வஸிஷ்ட வாம தேவாதி வந்தித (மஹா)

**சரணம்**

மஹாதேவ ஸுதம் குருகுஹ நுதம்
மார கோடி ப்ரகாசம் சாந்தம்
மஹா காவ்ய நாடகாதி ப்ரியம்
மூஷிக வாஹன மோதக ப்ரியம் (மஹா)

— ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

---

ராகம்—சசமனோஹரி  **பல்லவி**  தாளம்—ரூபகம்

15. ஸ்ரீகணநாதம் பஜரே சித்த பரா சக்தியுதம் (ஸ்ரீ)

**அனுபல்லவி**

நாகயஜ்ஞ ஸூத்ர தரம் நாத லயானந்த கரம் (ஸ்ரீ)

**சரணம்**

ஆகமாதி ஸன்னுதம் அகிலதேவ பூஜிதம்
யோகஸாலி பாவிதம் போகிஸாயி ஸேவிதம்
ராக த்வேஷாதி ரஹித ரமணீய ஹ்ருதய விதிதம்
ஸ்ரீகுருகுஹ ஸம்முகிதம் சின்மூல கமல ஸ்திதம் (ஸ்ரீ)

— ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—ஹம்ஸத்வனி பல்லவி தாளம்—ஆதி

16. வாதாபி கணபதிம் பஜேஹம்
வாரணாஸ்யம் வரப்ரதம் ஸ்ரீ (வாதாபி)

அனுபல்லவி

பூதாதி ஸம்ஸேவித சரணம்
பூத பௌதிக ப்ரபஞ்ச பரணம்
வீத ராகிணம் வினத யோகினம்
விச்வ காரணம் விக்ன வாரணம் (வாதாபி)

சரணம்

புராகும்ப ஸம்பவ முனி வர
ப்ரபூஜிதம் த்ரிகோண மத்ய கதம்
முராரி ப்ரமுகாத் யுபாஸிதம்
மூலாதார க்ஷேத்ர ஸ்த்திதம்
பராதி சத்வாரி வாகாத்மக
ப்ரணவ ஸ்வரூப வக்ர துண்டம்
நிரந்தரம் நிடல சந்த்ர கண்டம்
நிஜ வாம கர வித்ருத இக்ஷுதண்டம்
கராம்புஜ பாச பீஜாபூரம்
கலுஷ விதூரம் பூதாகாரம்
ஹராதி குருகுஹ தோஷித பிம்பம்
ஹம்ஸ த்வனி பூஷித ஹேரம்பம் (வாதாபி)

— ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குரு ஸ்தோத்ரம்

1 அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம் ।
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥ (1)

அக்ஞான-திமிராந்தஸ்ய க்ஞாஞாஞ்ஜன-சலாகயா ।
சக்ஷு-ருன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥ (2)

குருர்-ப்ரஹ்மா குருர்விஷ்ணுர்-குருர் தேவோ
மஹேச்வர: ।
குரு: ஸாக்ஷத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥ (3)

ஸர்வச்ருதி-சிரோரத்ன-விராஜித-பதாம்புஜ:
வேதாந்தாம்புஜ-ஸூர்யாய தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥ (4)

அநேக ஜன்ம-ஸம்ப்ராப்த-கர்மேந்தன-விதாஹினே ।
ஆத்மக்ஞாஞக்னி-தானேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥ (5)

ஆனந்த-மானந்தகரம் ப்ரஸன்னம்
க்ஞானஸ்வரூபம் நிஜபோத-யுக்தம் ।
யோகீந்த்ர-மீட்யம் பவரோக-வைத்யம்
ஸ்ரீ ஸத்குரும் நித்யமஹம் பஜாமி ॥ (6)

ப்ரஹ்மானந்தம் பரமஸுகதம்
கேவலம் க்ஞான மூர்த்திம்
த்வந்த்வாதீதம் ககன ஸத்ருசம்
தத்வ மஸ்யாதி லக்ஷ்யம் ।
ஏகம் நித்யம் விமல-மசலம்
ஸர்வதீ ஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுண-ரஹிதம்
ஸந்ததம் தம் நமாமி ॥ (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துச் ச ஸகா த்வமேவ ।
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ ॥ (8)

---

## ஸ்ரீ குரு—ஸ்தவ—அஷ்டகம்

ராகம்—மால்கௌஸ் | இந்துஸ்தானி ராகம்—கௌடஸாரங்க
தாளம்—ஆதி | தாளம்—கவாலி

பல்லவி

2. குருதேவ தயாகர தீன ஜனே ॥

சரணம்

பவ-ஸாகர தாரண காரண ஹே
ரவி நந்தன-பந்தன-கண்டன ஹே
சரணாகத கிங்கர பீதமனே (குருதேவ)

ஹ்ருதி கந்தர தாமஸ-பாஸ்கர ஹே
த்வம் விஷ்ணு ப்ரஜாபதி சங்கர ஹே
பரப்ரஹ்ம பராத்பர வேதவனே (குருதேவ)

மன—வாரண—சாஸன அங்குச ஹே
நர—த்ராண த்வரே ஹரி சாக்ஷுஸ ஹே
குண—கான பராயண தேவகணே (குருதேவ)

குலகுண்டலினி—த்ரும—பஞ்ஜக ஹே
ஹ்ருதி—க்ரந்தி—விதாரண காரக ஹே
மம மானஸ சஞ்சல ராத்ரி தினே (குருதேவ)

ரிபு ஸூதன மங்கள நாயக ஹே
ஸுக சாந்தி வராபய தாயக ஹே
த்ரய—தாப-ஹரே தவ—நாம—குணே (குருதேவ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமான–ப்ரபாவ விமர்தக ஹே
கதிஹீன ஜனே த்வம் ரக்ஷக ஹே
சித்த சங்கித வஞ்சித பக்தி தனே (குருதேவ)

தவ நாம ஸதா சுப ஸாதக ஹே
பதிதாதம மானவ–பாவக ஹே
மஹிமா தவ கோசர சுத்தமனே (குருதேவ)

ஜய ஸத்குரு ஈச்வர ப்ராபக ஹே
பவரோக விகார விநாசக ஹே
மனயேன ரஹே தவ ஸ்ரீசரணே (குருதேவ)

— ஸ்ரீ தேவேந்த்ரநாத மஜூம்தார்.

---

ராகம்—மிஸ்ரதேஷ் தாளம்—ஆதி

3. நமன கரூம் மை ஸத்குரு சரணு ।
ஸப து:க்கஹரணு பவ நிஸ்தரணு ॥
சுத்த பாவ தர அந்த:கரணு ।
ஸுர நர கின்னர வந்தித சரணு ॥

---

ராகம்—இந்துஸ்தானி காஃபி தாளம்—ஆதி

4. மோரீ லாகீ லடக குரு சரண நகீ ।
சரண பிணு முஜே கச்சு நஹி பாவே ।
ஜூட மாயா ஸப ஸபன நகீ ।
பவ ஸாகர ஸப ஸூக கயா ஹை,
ஃபிகர நஹீங் முஜே தரன னகீ ।
மீராகே ப்ரபு கிரிதர நாகர,
உலட பயீ மோரே நயன னகீ ॥

— ஸ்ரீ பக்த மீரா பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குரு சரணம் பவ குரு சரணம்
ஸத் குரு சரணம் பவ ஹரணம் ||

ஜயகுரு ஜயகுரு ஜயஸ்ரீ ஸத்குரு
ஜயகுரு சிவகுரு சச்சிதாநந்த குரு ||

பஜரே மானஸ பவ குரு சரணம்
பவஸாகர ஹர சிவ ஸ்ரீ சரணம் ||

பஜரே மானஸ தேசிகேந்த்ரம்
பகவான் ஸத்குரு ராமக்ருஷ்ணம் ||

ஸாரதா ஸமேத ஸ்ரீராமக்ருஷ்ணம்
ஸதாத்வம் சிந்தய ஸ்ரீசரணம் ||

ஸதாத்வம் சிந்தய ஸ்ரீசரணம்
ஸத்குரு சரணம் பவஹரணம் ||

---

## ஸ்ரீ ராமக்ருஷ்ண ஆராத்ரிகம்

ராகம்—மிஸ்ர பாஹார் (வங்க மொழி) தாளம்—சௌதால்

1. கண்டன-பவ பந்தன ஜகவந்தன வந்தி தோமாய் |
நிரஞ்ஜன நரரூபதர நிர்குண குணமய் ||

மோசன அக தூஷண ஜகபூஷண சித்கன காய் |
க்ஞாஞஞ்ஜன-விமல-நயன-வீக்ஷணே மோஹ ஜாய் ||

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்வர பாவஸாகர சிர-உன்மத ப்ரேம-பாத்தார் ।
பக்தார்ஜன-யுகள சரண தாரண பவபார் ॥

ஜ்ரும்பித-யுக-ஈச்வர ஜகதீச்வர யோக-ஸஹாய் ।
நிரோதன ஸமாஹித-மன நிரகி தவ-க்ருபாய் ॥

பஞ்ஜன-துஃக்க-கஞ்ஜன கருணகன கர்ம-கடோர் ।
ப்ராணர்பண-ஜகத-தாரண க்ருன்தன-கலி-டோர் ॥

வன்சன-காம-கான்சன அதிநிந்தித-இந்த்ரிய-ராக் ।
த்யாகீச்வர, ஹே நரவர! தேஹ பதே அனுராக் ॥

நிர்பய கத ஸம்சய த்ருட நிச்சய-மானஸவான் ।
நிஷ்காரண-பகத-சரண த்யஜி ஜாதி-குல-மான் ॥

ஸம்பத தவ ஸ்ரீபத பவ-கோஷ்பத-வாரி யதாய் ।
ப்ரேமார்பண ஸமதர்சன ஜகஜன-துஃக்க ஜாய் ॥

நமோ நமோ ப்ரபு வாக்ய-மனதீத
மனோ-வசனைகாதார்,

ஜ்யோதிர ஜ்யோதி உஜ்வல ஹ்ருதி கந்தர
துமி தமோ-பஞ்ஜன ஹார் ॥ ப்ரபு ॥

தே தே தே லங்க ரங்க பங்க
பாஜே அங்க ஸங்க ம்ருதங்க,

காஇச்சே சந்த பகத-ப்ருந்த-ஆரதி தோமார் ॥
ஜய ஜய ஆரதி தோமார்
ஹர ஹர ஆரதி தோமார்
சிவ சிவ ஆரதி தோமார் (கண்டனபவ)

॥ ஜய ஸ்ரீ குரு மஹா ராஜ்ஜீ கீ ஜய் ॥

— ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அருளிச்செய்த

## ஸ்ரீ ராமக்ருஷ்ண ஸ்தோத்ரம்

(வடமொழி)

2. ஓம் ஹ்ரீம் ருதம் த்வமசலோ குணஜித் குணேட்ய:
நக்தம் திவம் ஸகருணம் தவ பாத பத்மம் ।
மோஹங்கஷம் பஹுக்ருதம் ந பஜே யதோஹம்
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீனபந்தோ ॥ 1 ॥

பக்திர்-பகச் ச பஜனம் பவ பேதகாரி
கச்சந்த்யலம் ஸுவிபுலங் கமனுய தத்வம் ।
வக்த்ரோத்-த்ருதன்து ஹ்ருதயே ந விபாதி கிஞ்சித்
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீனபந்தோ ॥ 2 ॥

தேஜஸ் - தரந்தி தரஸா த்வயி த்ருப்த-த்ருஷ்ணு:
ராகே க்ருதே ருதபதே த்வயி ராமக்ருஷ்ணே ।
மர்த்யாம்ருதம், தவ பதம் மரணோர்மி-நாசம்
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீனபந்தோ ॥ 3 ॥

க்ருத்யம் கரோதி கலுஷம் குஹகாந்தகாரி
ஷ்ணுந்தம் சிவம் ஸுவிமலம் தவ நாம நாத
யஸ்மாதஹம் த்வசரணோ ஜக-தேக-கம்ய
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீனபந்தோ ॥ 4 ॥

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ-தர்ம-ஸ்வரூபிணே
அவதார-வரிஸ்டாய ராமக்ருஷ்ணாய தே நம: ॥

ஓம் நம: ஸ்ரீ பகவதே ராமக்ருஷ்ணாய நமோ நம: ॥
ஓம் நம: ஸ்ரீ பகவதே ராமக்ருஷ்ணாய நமோ நம: ॥
ஓம் நம: ஸ்ரீ பகவதே ராமக்ருஷ்ணாய நமோ நம: ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தேவி நமனம்

(ராகம்—பேஹாக்)

3. ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த—ஸாதிகே ।
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்து தே ॥
ஸ்ருஷ்டி—ஸ்திதி—விநாசாநாம் சக்திபூதே ஸநாதனி ।
குணாச்ரயே குணமயே நாராயணி நமோऽஸ்து தே ॥
சரணாகத-தீனார்த்த—பரித்ராண—பராயணே ।
ஸர்வஸ்யார்த்தி-ஹரே தேவி நாராயணி நமோऽஸ்து தே ॥
ஜய நாராயணி நமோऽஸ்து தே ॥
ஜய நாராயணி நமோऽஸ்து தே ॥
ஜய நாராயணி நமோऽஸ்து தே ॥

— ஸ்ரீ தேவி மஹாத்ம்யம்.

---

# ஸ்ரீ சாரதா தேவி ஸ்தோத்ரம்

4. ப்ரக்ருதிம் பரமா—மபயாம் வரதாம்
நரரூப—தராம் ஜனதாப-ஹராம் ।
சரணாகத ஸேவக—தோஷகரீம்
ப்ரணமாமி பராம் ஜனனீம் ஜகதாம் ॥ (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணஹீன-ஸுதான்-அபராதயுதான்

க்ருபயாத்ய ஸமுத்தர மோஹகதான் ।

தரணீம் பவஸாகர—பாரகரீம்

ப்ரணமாமி பராம் ஜனனீம் ஜகதாம் ॥ (2)

விஷயம் குஸுமம் பரிஹ்ருத்ய ஸதா

சரணும்புருஹாம்ருத—சாந்தி ஸுதாம் ।

பிப ப்ருங்க - மனோ பவரோக ஹராம்

ப்ரணமாமி பராம் ஜனனீம் ஜகதாம் ॥ (3)

க்ருபாம் குரு மஹாதேவி ஸுதேஷு ப்ரணதேஷு ச ।
சரணச்ரய-தானேன க்ருபாமயி நமோऽஸ்து தே ॥ (4)
லஜ்ஜா படாவ்ருதே நித்யம் ஸாரதே க்ஞான தாயிகே ।
பாபேப்யோ நஃ ஸதா ரக்ஷ க்ருபாமயி நமோऽஸ்து தே ॥ (5)
ராமக்ருஷ்ண-கத-ப்ராணும் தந்நாம—ச்ரவண—ப்ரியாம் ।
தத்பாவ-ரஞ்ஜிதாகாராம் ப்ரணமாமி முஹுர் முஹுஃ ॥ (6)
பவித்ரம் சரிதம் யஸ்யாஃ பவித்ரம் ஜீவனம் ததா ।
பவித்ரதா ஸ்வரூபிண்யை தஸ்யை குர்மோ நமோ நமஃ ॥ (7)

தேவீம் ப்ரஸன்னும் ப்ரணதார்தி-ஹன்த்ரீம்

யோகீந்த்ர-பூஜ்யாம் யுகதர்ம பாத்ரீம் ।

தாம் ஸாரதாம் பக்தி விக்ஞான—தாத்ரீம்

தயா-ஸ்வரூபாம் ப்ரணமாமி நித்யம் ॥ (8)

ஸ்நேஹேன பத்நாஸி மனோऽஸ்ம தீயம்

தோஷான—சேஷான் ஸகுணீகரோஷி ।

அஹேதுநா நோ தயஸே ஸதோஷான்

ஸ்வான்கே க்ருஹீத்வா யதிதம் விசித்ரம் ॥ (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரஸீத மாதர்-வினயேன யாசே
நித்யம் பவ ஸ்நேஹவதீ ஸுதேஷு ।
ப்ரேமைக-பிந்தும் சிரதக்த-சித்தே
விஷிஞ்ச சித்தம் குரு நஃ ஸுசாந்தம் ॥ (10)
ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத் குரும் ।
பாதபத்மே தயோஃ ச்ரித்வா
ப்ரணமாமி முஹுர் முஹுஃ ॥ (11)

— ஸ்ரீ அபேதாநந்த சுவாமிகள்.

---

## ஸ்ரீ விவேகானந்த ஸ்தோத்ரம்

ராகம்—சாயாகம்பாஜ் தாளம்—தேதால்

5. மூர்த மஹேச்வர-முஜ்ஜ்வல-பாஸ்கரம்
இஷ்ட—மமர—நரவந்த்யம் ।
வந்தே வேததனு—முஜ்ஜித-கர்ஹித
காஞ்சன-காமினீ பந்தம் ॥
கோடிபானுகர—தீப்த-ஸிம்ஹ-மஹோ
கடிதட-கௌபீன வந்தம்,
அபீரபீ—ஹுங்கார—நாதித-திங்முக
ப்ரசண்ட—தாண்டவ-ந்ருத்யம் ।
புக்தி முக்தி-க்ருபா-கடாக்ஷ-ப்ரேக்ஷணம்
அகதல-விதலன-தக்ஷம்,
பாலசந்த்ர-தர—மிந்து—வந்த்யமிஹ
நௌமி குரு-விவேகானந்தம் ॥

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமக்ருஷ்ண அஷ்டகம்

**ராகம்—ஹிந்துஸ்தானி அஸாவேரி** **தாளம்—கண்டசாபு**

*பல்லவி*

6. ஹே ராமக்ருஷ்ண த்வயி பக்தி ஹீனே
க்ருபா கடாக்ஷம் குரு தேவ நித்யம் ॥ (ஹே)

*சரணம்*

விச்வஸ்ய தாதா புருஷஸ்த்வ-மாத்யோ
(அ)வ்யக்தேன ரூபேண ததம் த்வயேதம் । (ஹே)
த்வம் பாஸி விச்வம் ஸ்ருஜஸி த்வமேவ
த்வம் ஆதி தேவோ விநிஹம்ஸி ஸர்வம் । (ஹே)
மாயாம் ஸமாச்ரித்ய கரோஷி லீலாம்
பக்தான் ஸமுத்தர்தும் அனந்த மூர்த்திః । (ஹே)
வித்ருத்ய ரூபம் நரவத்—த்வயா வை
விக்ஞாபிதோ தர்ம இஹாதி குஹ்யః । (ஹே)
தபோऽத தே த்யாகம் அத்ருஷ்ட பூர்வம்
த்ருஷ்ட்வா நமஸ்யன்தி கதம் ந விக்ஞாः । (ஹே)
ச்ருத்வாத்ர தே நாம பவன்தி பக்தாः
த்ருஷ்ட்வா வயம் தன்னது பக்தியுக்தாः । (ஹே)
ஸத்யம் விபும் சாந்தம் அஜாதி ரூபம்
ப்ரஸாதயே த்வாம் அஜ மன்த சூன்யம் । (ஹே)
ஜானாமி தத்வம் நஹி தேசிகேந்த்ரம்
கிம்வா ஸ்வரூபம் கதமேவ பாவம் । (ஹே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரஞ்ஜனம் நித்ய-மநன்த-ரூபம்
பக்தானுகம்பா-த்ருத-விக்ரஹம் வை ।
ஈசாவதாரம் பரமேசமீட்யம்
தம் ராமக்ருஷ்ணம் சிரஸா-நமாம: ॥

— ஸ்ரீ அபேதானந்த சுவாமிகள்.

---

## ஸ்ரீ ராமக்ருஷ்ண ஸ்தோத்ரம்

(ஸ்ரீமத் விரஜானந்த சுவாமிகள் அருளியது.)

ராகம்—ஹம்ஸத்வனி                                        திச்ரசாபு—ரூபகம்

7. ப்ரஹ்மரூப—மாதிமத்ய-சேஷஸர்வ—பாஸகம்
பாவஷட்க-ஹீனரூப—நித்யஸத்ய-மத்வயம் ।
வாங்மனோSதி கோசரஞ் ச நேதி நேதி பாவிதம்
தம் நமாமி தேவதேவ-ராமக்ருஷ்ண—மீச்வரம் ॥(1)

ஆதிதேய-பீஹரம் ஸுராரிதைத்ய-நாசகம்
ஸாது—சிஷ்ட—காமதம் மஹீஸுபார-ஹாரகம் ।
ஸ்வாத்மரூப-தத்வகம் யுகே யுகே ச தர்சிதம்
தம் நமாமி தேவதேவ-ராமக்ருஷ்ண—மீச்வரம்॥(2)

ஸர்வபூத-ஸர்க-கர்ம-ஸூத்ர-பந்த-காரணம்
க்ஞான-கர்ம—பாப-புண்ய-தாரதம்ய-ஸாதனம் ।
புத்திவாஸ-ஸாக்ஷிரூப ஸர்வகர்ம-பாஸனம்
தம் நமாமி தேவதேவ-ராமக்ருஷ்ண-மீச்வரம் ॥ 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸர்வஜீவ-பாபநாச-காரணம் பவேச்வரம்
ஸ்வீக்ருதஞ் ச கர்பவாஸ-தேஹ-பாச-மீத்ருசம்
யாபிதம் ஸ்வலீலயா ச யேன திவ்ய-ஜீவனம்
தம் நமாமி தேவதேவ-ராமக்ருஷ்ண-மீச்வரம் ॥ (4)

துல்யலோஷ்ட-கான்சனஞ் ச ஹேயநேய-நீகதம்
ஸ்த்ரீஷு நித்ய மாத்ரு ரூப-சக்திபாவ-பாவுகம் ।
க்ஞான-பக்தி-புக்தி-முக்தி-சுத்த-புத்தி-தாயகம்
தம் நமாமி தேவதேவ-ராமக்ருஷ்ண-மீச்வரம் ॥ (5)

---

## ஸ்ரீ ராமக்ருஷ்ண ஜயாஷ்டகம்

ராகம்—இந்துஸ்தானி கௌட ஸாரங்க | தாளம்—த்ரிதாளம்

பவ-பய-பஞ்ஜன, புருஷ நிரஞ்ஜன, ரதிபதி-கஞ்ஜன-காரீ ।
யதி-ஜன-ரஞ்ஜன, மனோமத-கண்டன, ஜய-பவ-பந்தன-ஹாரீ ॥

ஜய ஜன பாலக, ஸுரதள-நாயக, ஜய ஜய விச்வ-விதாதா ।
சிர-சுப-ஸாதக, மதி-மல-பாவக, ஜய சித-ஸம்சய-த்ராதா ॥
ஸுர நர வந்தன, விஜர-விபந்தன, சித மன-நந்தன-காரீ ।
ரிபுசய மன்த்தன, ஜயபவ-தாரண, ஸ்தல-ஜல-பூதர-தாரீ ॥
சமதம மண்டன, அபய நிகேதன, ஜய ஜய மங்கல-தாதா ।
ஜய-ஸுக-ஸாகர, நடவர நாகர, ஜய சரணாகத-பாதா ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரம-தம-பாஸ்கர ஜயபர மேச்வர, ஸுககர ஸுந்தர-பாஷீ ।
அசல ஸநாதன, ஜய-பவ-பாவன, ஜய விஜயீ அவிநாசி ॥
பகத-விமோஹன, வர-தனு-தாரண, ஜய ஹரி கீர்த்தன-
போலா ।
கத-கத-பாஷண,சிதமனதோஷண, டலடல-நர்த்தன-லீலா ॥
மதி-கதி-வர்த்தன, கலி-பல-மர்த்தன, விஷய-விராக-
ப்ரஸாரீ ।
ஜட-சித-சேதக, பவ ஜல-பேலக, ஜய-நர, மானஸ-சாரீ ॥
ஜய புருஷோத்தம, அனுபம-ஸம்யம,ஜய ஜய அன்தரயாமீ ।
கர-தர-ஸாதன, நர-துஃக்க-வாரண, ஜய ராமக்ருஷ்ண
நமாமி ॥

— ஸ்ரீ தேவேந்த்ரநாத மஜூம்தார்.

---

ராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஏகம்

9. நித்ய மங்களா ஜோதி ! நமோ நம,
ஸத்ய நாம ஸங்கீதா ! நமோ நம,
நிஷ்களங்க பொற்பாதா ! நமோ நம, அருள்மேவும்

நிர்குணலய தீபா ! நமோ நம,
ஸத்குண பரமேசா ! நமோ நம,
நிஷ்டையானந்த யோகா ! நமோ நம, ப்ரம்மமான

அத்வைதானந்த போதா ! நமோ நம,
சச்சிதானந்த ரூபா ! நமோ நம,
அத்புத குருநாதா ! நமோ நம, எமையீன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனே அருட்கண்ணு ! நமோ நம
ஒப்பிலா மணிவண்ணு நமோ நம,
ஐக்ய ஞான ஸம்பன்ஞ நமோ நம கலிதீராய்

சுத்த சக்திக் கனியே ! நமோ நம,
பக்தர் நெஞ்சிற் கினியாய் ! நமோ நம,
தொட்டணைத்து ரக்ஷிப்பாய்! நமோ நம, அறிவான

துரிய ஜோதி மலேயே ! நமோ நம,
பெரிய ஞானக் கடலே ! நமோ நம,
துயர் தீர் வானச் சுடரே ! நமோ நம, இடர்தீராய்

உத்தமர்க் கருள் வித்தே ! நமோ நம,
முத்தொழிற் கொரு கர்த்தா ! நமோ நம,
ஒப்பில் சாரதை ரமணு ! நமோ நம, உலகாளும்

ஓம் பகவதி பாலா நமோ நம,
ஓம் நரேந்த்ர பிதாவே ! நமோ நம,
ஓம் ஸ்ரீராமக்ருஷ்ணய ! நமோ நம, சரணம் சரணம்.

---

ராகம்—தோடி தாளம்—ரூபகம்

10. தேவனே ! பர பிரம்மன் நீ ! திகழ்
திண்மை நீ ! சக்தி நீ ! குணம்
யாவையும் கடந்தியாவையும் கொளும்
ஏகனே ! திரிபற்றவா !
பாவியேன் மருள் போக்கு நின் திருப்
பாதமே மனம் பாவியேன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவினேன் ததிநின் னடைக்கலம் !
    விமலனே ! தீனபந்துவே !

பூதலத்துள பந்தம் யாவையும்
    போக்குவாய் ! பக்தி, தோத்திரம்,
சீதியாமிவை தத்துவம் ! உனைச்
    சேர மார்க்கங் களாகுமே !
ஓதுவேன் வெறும் வாயினுல்; மனத்
    துற்றிலேன் இவை; மெய்யிலேன்
ஆதலால் ததிநின் னடைக்கலம்
    அண்டினேன், தீனபந்துவே !

உண்மையின் உருவான ஸ்ரீராம
    கிருஷ்ண தேவனே ! உன்பெயர்
திண்மை யன்பொடு செப்பு வார்தளை
    தீருமே ! மனம் ஆறுமே !
வண்மலர்ப் பதம் ஜனன மரணம்
    மாய்க்குமா மருந்தாதலால்
நண்ணினேன் ததிநின் னடைக்கலம்
    நலமிலேன் தீனபந்துவே !

நாதனே ! கொடும் மாயை நீக்குவாய்,
    நலிவில் நின் சுப நாமமே
தீதையும் நலமாக்குமால் ! செகம்
    தேடுகின்றவா ! தேவனே !
ஓதுநற் புகல்யாது முற்றிலேன்,
    உய்ய வேண்டினேன்; ஏழையேன்
ஆதலால் ததிநின் னடைக்கலம்
    அண்டினேன், தீனபந்துவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதலத்தினி லென்றும் நல்லறம்
போற்றுவாய் ! புகழ் போற்றியே !
மாதவா ! மதம் யாவும் சேர்ந்தொரு
மா(அ)வதாரா போற்றியே !
நாதனே ! அவதாரம் யாவினும்
நனி சிறந்தனே ! போற்றியே !
ஏதமில் மலர்ப்பாதம் போற்றியே !
ஸ்ரீராமகிருஷ்ண மா தேவனே !

---

## ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் அர்ச்சனமாலை

11. கங்கை நதிபாய் வங்கஞ் செழிக்கவும்
ராமா னந்தனுங் கிராமத் தலைவனின்
தீச்செய லதனுல் திரைப்பூ ரிழந்த
திருவைக் கமார்ப் புகூர்பெற் றுய்யவும்
காண்பா ரின்றியும் காப்பா ரின்றியும்
பன்னாள் ஈண்டுப் பட்டினி உற்றேன்
கொண்டுபோ என்னை நின்மனைக் கென்ற
ரகுவீரர் மீது இடையறு அன்புகொள்
குதிராம் சட்டர்ஜீ குலமது தழைக்கவும்
சந்திர மணியின் இல்லஞ் சிறக்கவும் (10)
வந்தவ தரித்த வரதனே போற்றி !
தற்சிறப் பிழந்தே தாழ்வுற் றிருந்த
கற்பகப் பரதநற் கதிதனைப் பெற்றிட
உற்பவித் திட்ட உத்தமா போற்றி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததும் வாழ்வின் முடிவைத் தெரிதர
நீறு பூசிய நின்மலா போற்றி !
காசினி புரக்கக் கயாவி லமர்ந்த
கார்வண்ண மேனியன் கருணையை விளக்க
கதாதரப் பெயரே சூடினை போற்றி !
சிறுவய ததனில் துறவிகள் தமது
உறவின் பெருமை உணர்ந்தனை போற்றி !
சிவராத் திரியன்று சிவனாக நடித்துப்
பாவசமா தியால்மெய் மறந்தனை போற்றி !
ராச மணிப்பேர் ராணியின் கொடையால்
தக்கணேஸ் வரத்தில் தனிச்சிறப் புற்ற
முக்கண்ணி கோயிலில் அர்ச்சக ராகிப்
புகழிழந் திருந்த பூசகர் தொழிற்குப்
புனிதமும் பெருமையும் அளித்தனை போற்றி !
பவதா ரணிபதம் புகலாய்க் கொண்டு
நவமான சித்திகள் நண்ணினை போற்றி !
அதேக்ஷேத் திரத்தில் அரும்பெருந் தவங்கள்
பன்னீ ராண்டு பயின்றதன் பயனாய்
மன்பதைக் குய்நெறி மலர்ந்தனை போற்றி !
பெண்ணுடை யுடுத்து பெண்போல் நடந்து
கண்ணன் காதலில் ராதையாய் வாழ்ந்து
பிரேமையின் மகிமை விளக்கினை போற்றி !
ஆண்டான் அடிமைத் திறந்தனை உணர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமனாய் இராமனை அடைந்தனை போற்றி !
சிங்கவா ஹினியமர் ஜெயராம் பட்டியில்
இராம சந்திர முகோபாத் யாயரின்
அருந்தவப் பேற்றால் வருந்திரு வான
சாரதா மணியைத் தாரமாய்க் கொண்டு
'பவன் பிரம்மசாரி பான்மொழிக் கன்னி'
எனும்பழம் வாக்கின் இலக்கிய மிதுவென
இல்லறம் துலக்கிய இறையே போற்றி !
சகதர் மணியாம் சாரதா மணியை
ஜெகதாம் பிகையாய் சிரத்தை யோடேத்தி
சோடசி பூஜை புரிந்தனை போற்றி !
தோதா புரியாம் துறவி தன்னையும்
மாதா வான பைரவி யாரையும்
குருவாய்ப் பேணி குருவாய் அவர்க்கும்
அரும்பெரும் உண்மைகள் அருளினை போற்றி !
வித்தையில் ஒப்பிலா விவேகா னந்தர்
பக்தியில் முதிர்ந்த பிரம்மா னந்தர்
சக்தி உபாசக சாரதா னந்தர்
சுத்த யோகியாம் சிவானந்த வள்ளல்
புத்தியில் சிறந்த அபேதா னந்தர்
பணிபுரி ராம கிருஷ்ணா னந்தர்
துரியா னந்தர் பிரேமா னந்தர்
எழுத்தறி வற்றும் ஏவலே புரிந்தும்
பழுத்த ஞானியாம் அத்புதா னந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும்பல உத்தம சீடரத் தினங்களை
ஏற்றருள் சுரந்த ஏந்தலே போற்றி !
அன்னார் மூலம் அவனி யெங்கும்
பாரத நாட்டின் பாரமார்த் திகத்தைப்
பரப்புதற் கிசைந்த பகவனே போற்றி !
சியாமப் புகூரிலும் காசிப் பூரிலும்
வாழ்ந்த காலத்தில் வரையறை யின்றி
வள்ளல்போல் ஞானம் வழங்கினை போற்றி !
வாய்பேச முடியாது வருத்தமுற் றிருந்தும் (70)
நோயின் கொடுமையை நோக்கா தன்பர்க்குத்
தாய்போற் கருணை காட்டினை போற்றி !
வேதம் ஆகமம் உபநிஷத் கீதை
இதிகாச புராணம் எல்லா வற்றிலும்
அடங்கிய தத்துவம் அனைத்தையும் எவரும்
அறியும் வண்ணம் அற்புத முறையில்
உபகதை மூலம் உரைத்தனை போற்றி !
சரியை கிரியை சாற்றிடும் யோகம்
உரியநல் ஞானம் எனும்வழி நான்கையும்
அனுஷ்டானந் தன்னால் அருளினை போற்றி ! (80)
சைவம் வைஷ்ணவம் சாக்தம் கிறிஸ்தவம்
இஸ்லாம் ஆகிய எல்லா மதங்களின்
உண்மையை சாதனையின் உறுதியால் கண்டு
சமரஸம் அருளிய ஜகத்குரு போற்றி !
சாமியின் பெயரால் சண்டையை மூட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியைக் கெடாதீர் என்றனே போற்றி !
அத்வைதம் துவைதம் விசிட்டாத் துவைதம்
எனும்வாதம் வீணென் றியம்பினே போற்றி !
சகுண நிர்க்குணச் சண்டையை விடுத்துப்
பக்திசெய் வீரெனப் பகர்ந்தனே போற்றி ! (90)
இக்கலி யுகத்தில் இறைநாம ஜெபமே
இனியசா தனையென் றுரைத்தனே போற்றி !
சாதனை யற்ற சாஸ்திரப் படிப்பால்
ஆவது வாதென் றறைந்தனே போற்றி !
பெண்ஆண் அலியெனும் பெற்றிய போற்றி !
கண்ணனோ டொன்றிய ராமனே போற்றி !
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி !
தன்னிக ரில்லாத் தற்பரா போற்றி !
சச்சிதா னந்த சற்குரு போற்றி !
போக்கு வரவிலாப் பொருளே போற்றி ! (100)
வாக்கும் மனமும் கடந்தாய் போற்றி !
பக்தனே போற்றி ! பகவனே போற்றி !
முக்தனே போற்றி ! முதல்வனே போற்றி !
சின்மயா போற்றி ! நின்மலா போற்றி !
விமலா போற்றி ! வித்தகா போற்றி !
ஸ்ரீராம கிருஷ்ண தேவனே போற்றி !
போற்றி ! போற்றிநின் பொன்னடி போற்றி !
போற்றி ! போற்றிநின் பொன்னருள் போற்றி ! (108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ராமகிருஷ்ண திருத்தாண்டகம்

12. காயாவி லினிதமர்ந்தே காசினியைக் காக்கும்
கதாதரரின் கருணையினுற் கருச்சேர்ந் தானைச்
சேயாய்அத் திருப்பெயரே சூடி ஞானை
ஸ்ரீராம கிருஷ்ணரெனத் தேவர் போற்ற
ஓயாது காளியன்பில் உருகி ஞானை
உலகுக்கு உய்யுநெறி காட்டி ஞானைத்
தாய்போலத் தரணியை ஆள் தயாளன் றன்னைத்
தக்ஷிணேஸ் வரத்திலென்றும் காண லாமே.

— திரு க. இராமச்சந்திரா.

---

## ஸ்ரீ ராமகிருஷ்ண கீர்த்தன மாலை

(ராகமாலிகை—ஆதிதாளம்)

13. ஆதியாம் பரம அனைத்தினும் உறைவோய்
அசைவிலாய் குணங்களைக் கடந்தோய்
ஓதினர் உளத்தில் ஒளிதரும் சுடரே
உயர்வற உயர்நலம் உடையாய்
காதலார் மோகம் களைந்திடும் கருணைக்
கழலிணை பகலிராக் கருதேன்
ஆதலால் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதினித் துயரந் துடைத்தருள் புனிதா
மேதகு மெய்ப்பொருள் எய்தப்
போதிய வாகும் பக்தியும் பகமும்
போற்றுசீர்ப் பஜனையும் என்ப
ஓதிடும் அளவே இவையெலாம் அன்றி
ஒருசிறி தெனதுளத் தொளிரா
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய் (2)

நீதமெய்ந் நெறியின் நிலையிட மேநின்
நிறையருட் கழலினை விழைவார்
ஏதமில் ஆசை எனைத்துணை யெனினும்
எய்துவர் எளிதினின் ரஜசைத்
தீதறக் கடப்பர் மரிப்பலை தீர்ப்பர்
திருவடி மானிடர்க் கமுதாம்
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள்பொலன் கழலோய். (3)

பேதமைப் பிறவிப் பிணியொழி மருந்தே
பிறங்குநின் மங்கள நாமம்
தீதையும் நலமாய்த் திகழ்தரத் திருத்தும்
திரிதரும் திரைக்கடல் உடுத்த
மேதினி முடிவிற் சேர்தனி முதலே
வேறொரு களைகணிங் கில்லேன்
ஆதலின் உனையே சரணென அடைந்தேன்
அலர்ந்தவர்க் கருள்பொலன் கழலோய். (4)

அறந்தலை நிறுவினை அனைத்தறன் வடிவினை
சிறந்தனை பிறந்தபல் பிறவியுள் இறைவ
ஸ்ரீராம கிருஷ்ணநின் இணைப்பதம் அடியேன்
பராவுவன் யாண்டும் படிமிசைப் பரிந்தே. (5)

— ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—பிலஹரி தாளம்—ஆதி

பல்லவி

14. உனையன்றித் துணைகாணேன் — ஸ்ரீராமகிருஷ்ணு
எனையாட் கொண்டருள்வாய் தேவாதி தேவா

அனுபல்லவி

முனிவர்கள் போற்றிடும் மோனப் பெரு நிலையே
முழுமுதலே அன்பே முடிவிலா இன்பமே (உனை)

சரணம்

சித்தமலம்தனைப் போக்கும் சற்குருவே சின்மயனே
ஸித்தியெலாம் தருகின்ற கற்பகமாம் புண்ணியனே
முத்தியெனும் நிலைஎய்த நித்தமும்பே ரன்னையைப்போல்
பக்தியெனும் அமுதூட்டும் பரம ஹம்ஸனே (உனை)

———

ராகம்—திலங் தாளம்—ஆதி

பல்லவி

15. பக்தியினை ஊட்டும் பண்பினையும் காட்டும்
பாதையினை வகுத்த பரமஹம்ஸா சரணம் (பக்தி)

அனுபல்லவி

ஸத்தியமே உயிராய் சாந்தமே தன்னுருவாய்
சஞ்சலங்கள் யாவும் தவிர்ந்திட அவதரித்தாய் (பக்தி)

சரணம்

அன்னை பராசக்தி அன்பருமாய் உலகின்
ஆருயிர்க் கெல்லாம் உற்ற நண்பருமாய் இருந்தே
முன்னை செய்த வினைகள் மாய்ந்திடவே என்றும்
முக்தியெனும் நிலை எய்திடவே பாரில் (பக்தி)

— லலிதகானம்

———



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—சுரஹரப்ரியா தாளம்—ஆதி

பல்லவி

16 திருவருள் தாருமையா — உம்மை
சரணம் சரணமென்று மருவினேன் ராமகிருஷ்ணா

அனுபல்லவி

அருவுமுருவுமில்லா ஆதிப்பரம் பொருளை
கருதிப் பேரானந்தக் கடலினில் மூழ்கிட (திரு)

சரணம்

குருதேவ னென்றே குழுமிய பலர்க்கும்
அருட்சோதி இன்பம் அள்ளிக் கொடுத்தாய்
என்னையும் குருவே ! ஏற்று ஆட்கொண்டு — பின்
தன்னைத் தானறியும் சச்சிதானந்தம் தர. (திரு)

— ''சூலம்''

---

ராகம்—சுத்தபங்காள தாளம்—ஆதி

பல்லவி

17. குரு தேவ தேவ சரணமென்று வந்தேன் (குரு)

அனுபல்லவி

பரமானந்தத்தின் பதி ராமகிருஷ்ணா
கருணா சொரூபா கரையேற வைப்பாய் (குரு)

சரணம்

அறவாழ்வு காண ரகு ராமனாய்
அருங்கீதை நல்க ஆய்க் கிருஷ்ணனாய்
இவை வாழ்விலுலகம் உற ராமகிருஷ்ணன்
என இன்று வந்தாய் இது உன்றனருளே (குரு)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—கௌமுதீ—காம்பாஜ் தாளம்—தீர்ரசாபு/ஏக்தால்

(வங்கமொழி)

18. ராமக்ருஷ்ண —சரண ஸரோஜே,
மஜரே மன மதுப மோர் ।
கண்டகே ஆவ்ருத விஷய கேதகீ
தேகோனு தேகோனு தாஹே விபோர் ॥
ஜனம மரண விஷம வ்யாதி
நிரவதி கத ஸஹிவே ஆர் ।
ப்ரேம பீயூஷ பியரே ஸ்ரீபதே,
பவேரி ஜாதொனு ரவே நா தோர் ।
தர்மாதர்ம ஸுக துஃக்க சாந்தி ஜ்வாலா,
த்வந்த்வ கேலா மாஜே நாஹி நிஸ்தார்;
க்ஞான க்ருபாணே பரம ஜதனே,
காடரே காடரே கர்ம டோர்,
''ராமக்ருஷ்ண'' நாம் போலோரே வதனே,
மோஹேரி ஜாமினி ஹொயிபே போர் ।
துஃஸ்வபன—ஜ்வாலா ரவே நா ரவே நா
சூடே ஜாபே தோர் கூமேரி கோர் ।

— ஸ்ரீ தேவேந்த்ரநாத மஜும்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வங்கமொழி)

ராகம்—மிஸ்ர தாளம்—ஏக்தால்

19. பரம குரு ஸித்த யோகீ மாத்ருபக்த யுகாவதார் ।
பரம ஹம்ஸ ஸ்ரீராமக்ருஷ்ண லஹோ ப்ரணும்
நமஸ்கார் ॥
ஜாகாலே பாரத ஸ்மசானதீரே,
அசிவநாசினி மஹாகாலீரே;
மாத்ரு நாமேர் அம்ருதநீரே,
பாஸாலே நிஜ பாரத ஆபார் ॥
ஸத்ய யுகேர் புண்ய—ஸ்ம்ருதி,
ஆனிலே கலிதே துமி தாபஸ்,
பாடாலே பாரத தேசே தேசே ரிஷி
புண்ய—தீர்த்த—வாரி—கலஸ் ।
மந்திரே மஸ்ஜிதே கீர்ஜாய்,
பூஜிலே ப்ரஹ்மே ஸமச்ரத்தாய்
தவ நாம மாகா ப்ரேம நிகேதனே
பரியாச்சே தாயி த்ரிஸம்ஸார் ॥

— காஜி நஜ்ருல் இஸ்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—சுரட்டி மங்களம் தாளம்—ஆதி

20. பல்லவி

ஸ்ரீராம கிருஷ்ணருக்கு ஜயமங்களம் — திவ்ய
செங்கமல பாதருக்கு சுபமங்களம்.

சரணம்

1. காளிஉபாசருக்குக் கருணையுரு வானவர்க்கு
வாழியென்றே வையகம் வாழ்த்தும் வரதருக்கு (ஸ்ரீ)

2. முக்கண்ணி கடாக்ஷத்தால் மூவாசை கொன்றவர்க்கு
தக்கணேஸ்வரத் திருந்தே தாரணியை
வென்றவர்க்கு (ஸ்ரீ)

3. நாஸ்திக கொள்கையினுல் நாசமுற்ற மக்கள்தம்மை
ஆஸ்திக ராக்கித்தம் அடிபணிய வைத்தவர்க்கு (ஸ்ரீ)

4. சாரதை மணாளருக்கு ஸர்வமத தாசருக்கு
பாரதத்தை உய்யவைத்த பரமஹம்ஸ தேவருக்கு (ஸ்ரீ)

---

# ஸ்ரீ சாரதாதேவி ஸ்தோத்ரம்

(ராகம்—ராகமாலிகை)

1.

பரமாணுய் பொருண்முதலே பயந்தீர்ப்பாய் வரந்தருவாய்
நரவடிவம் தரித்தருளி நானிலத்தார் துயர் துடைப்பாய்
சரணடையுந் தொழும்பினர்க்கார் சாந்திமகிழ் வுளத்
தருள்வாய்
தரணியர்க்கோர் தனிப்பரமாந் தாய்நினையே வணங்கு-
வனே.

2.

நலமில்லார் பிழைமலிந்தார் நனிமோகந் தனில்வீழ்ந்தார்
அலமரும்நின் சுதர்க்கின்னே அருளாலுய் வளித்திடுக்
கலிமருவும் பவக்கடலின் கரைசேர்க்கும் மரக்கலன்நீ
தலமுழுதின் தனிப்பரமாந் தாய்நினையே வணங்குவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நெஞ்சமெனும் மதுகரமே நீவிடய மலர்நீத்துக்
கஞ்சமல ரடியிணையின் கவினமுதை மாந்தியென்றும்
விஞ்சுமனம் சாந்தியுற்று வெம்பவமாம் பிணியொழிக
தஞ்சமருள் தனிப்பரமாம் தாய்நினையே வணங்குவனே.

4. புரிகவருள் நினைவணங்கும் புதல்வர்க்கே பெருந்தேவி
தருகசரண் தாளிணையிற் கருணைமயி வணங்குவனே.

5. ஞானமருள் சாரதையே நாணுடுத்தாய் சந்ததமும்
ஈனமறுத் தெமைக்காப்பாய் இறைஞ்சுவன்யான்
கருணைமயீ.

6. இராமகிருஷ்ணர் சாருயிரோய் இன்பெயர்கேட்
கும்விழைவோய்
பராவுநல மகிழ்வடிவோய் பணிகுவன்யான் பல்காலும்.

7. தூய்மைபெறு சரிதையினய் தூய்மைபெறு வாழ்க்கை
யினய்
தூய்மையொரு வடிவானய் தொழுகுவம்யாம் தொழு
வோமே.

8. மாகருணை பொழிதேவீ வழிபடுவோர் துயரறுப்பாய்!
யோகரசர் தொழப்பெற்ருய் யுகஅறத்தின் கொள்கலன்நீ
பாகமுற அன்புணர்வு பாலிக்கும் சாரதையே
ஆகமுறு •தயையானய் அஞ்சலிப்பன் எக்காலும்.

9. நேயமதால் எம்மவரின் நெஞ்சமவை பிணித்தருள்வாய்
ஏயமல மளையுமெமை ஏதுவிலா அருளால்நின்
தூயமடி மீதமர்த்தித் துன்னியஎம் மாசனைத்தும்
ஆயுமொரு நற்குணமா ஆக்குவையுன் விசித்திரமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. விநயமுடன் இரந்திடுவன் விரும்பியருள் அன்னைநின்
தநயரிடம் எந்நாளும் தயையுடையை ஆகுகநீ
நனிநெடுநாள் வெந்தவுளம் நண்ணுபிரே மைத்துளியால்
நனையஎம்பால் அருஞ்சாந்தி நலம்பெறுக நல்கிடுவாய்.

11. சாரதையாம் தேவியம்மை ஜகத்குருவாம் ராமகிருஷ்ணர்
ஈரிருதாள் மலர்பற்றி இறைஞ்சுவன்யான் பல்காலும்.

---

## ஸ்ரீ சாரதா ராகமாலா

**ராகம்—ராகமாலிகை** **தாளம்—ஆதி**

**பிலஹரி**

2. சக்தி சொரூபம் சாரதா தேவி
சரணம் பணிவோம் புதுமலர் தூவி
பக்தியை ஊட்டும் தெய்விகப் பாவை
பகவான் ராம க்ருஷ்ணரின் சேவை (சக்தி)

**தன்யாசி**

காயம் தீண்டாக் காதலின் ஜோதி
கணவன் தவத்தைக் காத்திடும் பாதி
நேமம் தவறு நிர்மல யோகம்
நிறைகுணப் பெண்மை நிரந்தர த்யாகம் (சக்தி)

**கல்யாணி**

தன்னலம் கருதாத் தாய்மையின் பீடம்
தவசிகள் தேடும் சாந்தியின் பாடம்
மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் காணும்
மாபெருங் கருணையின் மாட்சிமை பூணும்
(சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஹிந்தோளம்

சங்கடம் எதையும் சகித்திடும் பொறுமை
சாதனை சேவைகள் புரிந்திடும் திறமை
மங்கையர் குலத்தின் மதிப்பரும் பிறவி
மானிடப் பொதுவிலும் மிகப்பெருந் துறவி
(சக்தி)

### மோஹனம்

பாரத நாட்டின் பழம்புகழ் நாட்டும்
பத்தினிப் பெண்மைப் பண்பினைக் காட்டும்
சாரதா தேவியின் சரித்திரப் பெருமை
'சாந்தம்' என்பதை சாதித்த அருமை (சக்தி)

### மத்யமாவதி

வாழ்கநம் பரம ஹம்ஸரின் மனைவி
மாதவப் பெருமையைக் காத்திடும் துணைவி
வாழிய சாரதா அன்னையின் பக்தி
வையகத் துயிர்களை வளர்த்திடும் சக்தி (சக்தி)

— நாமக்கல் கவிஞர்
திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை.

---

## ஸ்ரீ சாரதா தேவியார்

( திருத்தாண்டகம் )

3. பாரதத்தின் வேதாந்தப் பதியில் வந்து
பாரெல்லாம் ஒளிவீசும் பரம ஹம்ஸர்
தாரமதாய் வைத்துகந்த தைய லாளைத்
தாரணிக்கோர் தனியணங்காய்த் தோன்றி ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்போல் பக்திநெறி நல்கி ஞானே
நரேந்திரனுக் கருள்சுரந்த நங்கை தன்னை
சாரதையாம் திருநாமம் படைத்து ளாளைச்
சரண்புகுவார் சாந்திநிலை யடைவர் தாமே.

— திரு. க. இராமசந்திரா.

---

ராகம்—ஷண்முகப்ரியா தாளம்—ஆதி

பல்லவி

4. துறவுக்கும் தூய்மைக்கும் உருவே — ஞானச்
சுடர் பொங்கி எழ நின்ற திருவே (துறவு)

அனுபல்லவி

குறைவற்ற இன்பத்தின் உறைவிடம் நீயே
குன்றாத தவவாய்மை குடிகொண்ட தாயே (துறவு)

சரணம்

நெஞ்சு மலர வரும் நீள் கதிர் ஆனாய்
நினைக்கும் அடியார் இன்னல் நீங்குமே தானாய்
தஞ்சம்என அடைந்தேன் சாரதா மணியே
தமியேன் புரிய அருள்நின் திருப்பணியே (துறவு)

---

ராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

5. அன்னை சாரதாமணிதேவி அருள்மிகு
அன்புருவாய் வந்த ஆதிநாராயணியே (அன்னை)

அனுபல்லவி

முன்னையுலகம் ஈன்ற முதல்வியே தேவியே
இன்னல்கள் எம்மைவிட் டேகிட வந்த-பேர் (அன்னை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

பரமனருள் வடிவான பராசக்தி
பயங்கர ரூபி ஓம்காளி பரமேச்வரி
அமரமதளித்திடும் அமுதுடனே பிறந்த
அமலையும் கலைமகள் ஆகிய தேவியும்
பகவான் ராமகிருஷ்ணன் பாதபங்கய மமர்
ஜகமே பணியும் ஸர்வசக்தியும் நீயேஎன் (அன்னை)

———

ராகம்—ஹம்ஸத்வனி தாளம்—ஆதி

பல்லவி

6. சாரதாமணி ஸர்வகாரணி
ஸத்குணீ கல்யாணி சகல கலைவாணி (சாரதா)

அனுபல்லவி

பாரத பெண்மையின் பூரண ரூபிணி
பக்தர் நெஞ்ச மெல்லாம் நர்த்தனம் செய்வேணி
(சாரதா)

சரணம்

வான்புவி வணங்கும் தேன்பதத் துறவி
வள்ளல் ராமகிருஷ்ணர் நல்லறத் தலைவி
ஆன்மஜோதி காட்டும் ஞானக் கண்மணியே
அம்புவிக் கெல்லாம் பேரின்பமூட்டும் தாயே (சாரதா)

மந்திரப் பொருள் நீ, தந்திரக் கலை நீ
மாதவப் பயன் நீ, சாதனைத் திறன் நீ
சிந்தனைக் கினிக்கும் சுந்தரக் கனி நீ
பந்த மறுத்து நீ தந்திடு அருள்-ஸ்ரீ (சாரதா)

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—பிலஹரி தாளம்—ஆதி

பல்லவி

7. சாரதா தேவி பாதம் சரணடைந்தே நிதம்
சக்தி ஓம் சக்தி என்று வாழ்த்திடுவோம் (சாரதா)

அனுபல்லவி

பாரதத் தேசப் பெண்கள் பண்பாட்டின் வடிவாகி
பாரெங்கும் தூய தாயாய்ப் பேரொளி வீசிடும்(சாரதா)

சரணம்

பரமஹம்ஸரின் தர்ம பத்தினி யாகவந்து
பர்த்தாவின் அருள் காத்த பரமேச்வரி
கருணையே வடிவாகிச் சரணடைந்தோரைத் தாங்கி
கர்மவினை களையும் கருணாம்பிகை யாம்அன்னை (சாரதா)

— ''குலம்''

---

ராகம்—செஞ்சுருட்டி தாளம்—சா||

பல்லவி

8. தேவி பாதம் பணிவோம் – சாரதா
தேவிபாதம் பணிவோம்
தேவி பாதம் பணிந்தே – அன்னையின்
திருவருள் பெறுவோம்

சரணம்

கூவியழைத்திடுவோம் – அன்னையை
கூவியழைத் • திடுவோம்
தாவிப் பிடித்திடுவோம் – அன்னைபாதம்
தாவிப்பிடித் திடுவோம்
தாயே என்று ஓலமிட்டால் தயவுடன் வருவாள்
மாயையை போக்கி மருள்தனை நீக்கியே
மங்கள வாழ்வதைத் தந்திடுவாள் (தேவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி யளித்திடுவாள் – தூய அன்னை
சக்தியளித் திடுவாள்
பக்தி யளித்திடுவாள் – எங்களன்னை
முக்தியளித் திடுவாள்
அம்மா என்று ஓலமிட்டால் அன்புடனே அணைப்பாள்
இம்மையிலும் பின் மறுமையிலும் – அவள்
இன்ப நிலையதை ஈந்திடுவாள் (தேவி)

— ''குலம்''

---

ராகம்—ஹரிகாம்போஜி தாளம்—ஏகம்

பல்லவி

9. சாரதா ஜயந்தியைக் கூடிக் கொண்டாடுவோம் – அவள்
தண்ணருளை நினைந்து உள்ளம் கனிந்து பாடுவோம்.

அனுபல்லவி

பொல்லாவினை போக்கிடு மா புனிதையாமவள்–அந்தப்
பூரணியின் புகழைநிதம் போற்றிப் பாடுவோம்.

சரணம்

பரமஹம்ஸ தேவன் அவள் பர்த்தாவாகினுன்—வாழ்க்
பாவனையில் அன்னையென்றே சாதனை செய்தான் [கைப்
சாரதையும் நாதன்அருட் சக்தியைக் காத்தாள்—அந்தச்
சாதனையை எண்ணித்தூய வாழ்வை நாடுவோம்.

பாரததேசப் பெண்மையதின் பெருமை நாட்டினுள்
– அவள்
பாரினிலே தாய்மையதின் பொருளைக் காட்டினுள்
தூயஅன்னை யென்றுபோற்றும் ஜோதியாகினுள்—அருட்
தாயின்பாதம் பற்றித்தூய சக்தி வேண்டுவோம்.

பாவிகளைப் புனிதராக்கும் பரமதயாளி—அவள்
பாரில்திரு மேனிகொண்ட பரம ஈச்வரி
சாரதையாம் நாமம் பூண்ட சக்தியேயவள் – பரா
சக்திசக்தி சக்திஎன்று பாடி யாடுவோம்.

— ''குலம்''

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனம்

10. அனன்த ரூபிணி, அனன்த குணவதி
அனன்த நாம்னி கிரிஜே மா ।
சிவஹ்ருன் – மோஹினி, விச்வவிலாஸினி
ராமக்ருஷ்ண ஜய தாயினி மா ।
(த்வம்) ஜகஜ்–ஜனனீ, த்ரிலோக பாலினி
விச்வ – ஸுவாஸினி சுபதா மா ।
துர்கதி நாசினி, ஸன்மதி தாயினி
போக – மோக்ஷ – ஸுக காரிணி மா ।
பரமே பார்வதி ஸுந்தரி பகவதி
துர்கே பாமதி த்வம் மே மா ।
ப்ரஸீத மாதர் நகேந்த்ர நந்தினி
சிர ஸுக தாயினி ஜயதே மா ।

— ஸ்ரீ குணாதீதாநந்த சுவாமிகள்.

---

**ராகம்—மத்யமாவதி** **தாளம்—ஆதி**

**பல்லவி**

11. மங்களமே ஜய மங்களம் — சுப
மங்களமே நித்ய மங்களம்.

**அநுபல்லவி**

மங்களதேவி ஸ்ரீசாரதா அன்னைக்கு
மங்களம் பாடிக்கொண் டாடிடுவோம் — ஜய (மங்)

**சரணம்**

எங்கும் வணங்கும் மங்கள ஜோதியாம்
எங்கள் ஸ்ரீராம கிருஷ்ண தேவருக்கும்
பாங்குடன் தெய்வீகம் பரப்பிய ஞானப்
பண்டித விவேகா நந்தருக்கும் — ஜய (மங்)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் - சுரட்டி　　　　மங்களம்　　　　தாளம்— ஆதி

12 சாரதா தேவியார்க்கு ஜயமங்களம் — திவ்ய
சாந்த சொரூபியார்க்கு சுபமங்களம் (சாரதா)
வங்கஞ் செய்புண்ணியத்தால் வந்தவ தரித்தவர்க்கு
சிங்கவா ஹினிபாதம் சீராகப் பேணினர்க்கு (சாரதா)
கருணையுரு வானவர்க்கு காமாதி வென்றவர்க்கு
இருளற்ற இதயமதில் இனிதுவீற் றிருப்பவர்க்கு
(சாரதா)
கன்னியழி யாதிருந்தும் கனமைந்தர் பெற்றவர்க்கு
அன்னையென அந்நியரும் அழைக்கும்நிலை
யடைந்தவர்க்கு (சாரதா)

---

## ஸ்ரீ விவேகானந்தர் பாடல்கள்

ராகம்—மோஹனம்　　　　தாளம்—ஆதி

**பல்லவி**

1. ஞானம் தழைக்கச் செய்தானே — ஸமரஸ
ஞானம் தழைக்கச் செய்தானே.

**அனுபல்லவி**

தானந்தமில்லா பரமானந்தம் நிலைபெற — விவேக
ஆனந்த கேசரி அவனி உய்ந்திட நல்கி (ஞானம்)

**சரணம்**

தானம் தவங்கள் எல்லாம் தன்னுயிர்போல் மன்னுயிரை
பேணும் திறங்களன்றே பெரிய பொருளைச் சொல்லி
மோனம் கடந்த பொருள் முக்தி அளிக்கும் தெய்வ
ஆனந்த வாரிதியை அடைய வழிவகுத்தே (ஞானம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்--கானடா | பல்லவி | தாளம்—ஆதி

2. வணங்கி அடிபணிந்தோம் விவேகானந்த !
வந்தே நமோநமः என்றுனை வாழ்த்தியே (வ)

சரணம்

பார்முழுதும் பணிந்துநின்ற பாரதியின் ஸுதனே
பாரிலெங்கும் வெற்றிகொண்ட பாரதநன் மகனே
வீறுகொண் டெழச்செய்தாய் வேதாந்த சிங்கமே
வீரகர்ஜனை புரிந்த விஜயதீர சிங்கமே (வ)

கர்மஞான பக்தியோக கனியைத்தந்த தேசிகா—நின்
கருணையாலே வாழ்வுகண்டோம் காத்தருள்வாய் குருபரா
ஜீவஸேவை செய்வதேசிவ பூஜையாகு
மென்றுணர்த்தி
பாவமோடு ஆற்றவே பணித்தனை தயாபரா ! (வ)

ஆன்மஞான வாழ்வினிலே ஆழவழி காட்டினுய்
ஆனபெரு வாணியாலே அருளமுதம் ஊட்டினுய்
ஏற்றவரைக் கொண்டுநல்ல இயக்கமதை நாட்டினுய்
தேற்றியுனை சரணடைந்தோம் தீரவிஸ்வ நாயகா! (வ)

— ஸ்ரீரங்கானந்தர்.

---

ராகம்—கானடா | தாளம்—ஆதி

3. மங்காப் புகழ் சேர் வங்கநாடு
தந்தவி வேகா னந்தா சரணம்
எங்கும் கீர்த்தி தங்க வைத்தாய்
எங்கள் வேந்தா சரணம் சரணம் |
ஸ்ரீராம க்ருஷ்ண சீடருள் தலைவனுய்
சீருடன் திகழ்ந்த செல்வா சரணம்
பாரதப் பெருமை பாரினில் பரப்பிய
பக்தனே முக்தனே சரணம் சரணம் ||

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—கானடா தாளம்—ஆதி

4. சீர்பெருகு வங்கநிலம் சிறக்க வந்தோன்
ஸ்ரீராமகிருஷ்ண பதம் சிரமேற் கொண்டோன்
பார்புகழும் வேதாந்தப் பயிர் வளர்த்தோன்
பாரதத்தின் பெருமையெங்கும் பரவச்செய்தோன்
வேர்பறிய எதிர்வாதம் விரித்துக்கூறி
வீண்வாதம் செய்பவரை வென்று வெற்றித்
தார்புனைந்த தவயோகி விவேகானந்தன்
தாள்பணிந்து வாழ்வோமித் தரணி மீதே.

---

## ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்

(திருத்தாண்டகம்)

5. தத்தர்செய்த தனித்தவத்தால் அவதரித்துத்
தன்மயத்தில் சின்மயமாய் தன்மைபெற்றே
பித்தனென்ற பேர்படைத்த ராமகிருஷ்ணப்
பெருமானின் திருவருளுக் குரியனாகி
அத்துவித நெறிவிளக்கும் குரவனாயெம்
ஆன்றோர்கள் தேடிவைத்த ஞானப்பேற்றை
எத்திசையும் எடுத்தளித்த விவேகானந்த
ஏந்தல்பதம் ஏத்திநாம் வாழுவோமே.

— திரு. க. இராமசந்திரா.

---

ராகம்—மோஹனம் தாளம்—ஆதி

6. தேவரெலாந் திறைகொடுக்கும் தேவ தேவன்
திகழ்முனிவர் வியந்தருளுஞ் சீர்மை சான்றோன்
யாவரெல்லாம் இகல்விளைத்து நின்றார் தம்மை
இன்னிசையஞ் சொற்படையால் வென்றமேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்து வேதாந்தக் கடல்க டைந்து
தரணியெலாம் ஞானவமு தளித்த செல்வன்
சேயகத்துத் தூய்மையெனத் தூய்மை மிக்கோன்
சேயகத்தும் பெயர்விளங்க நின்ற தோன்றல்
பிறமதங்க ளெனுமதங்கொள் வேழக் கூட்டம்
பிறழ்ந்தொடுங்க அடல்கொண்ட பெருமைச்சிங்கம்
அறமதெங்கு மருளிெனாடு விளங்கும் வண்ணம்
அருமொழிகள் தெளிந்துரைத்த அன்பின் வள்ளல்
வேதமொழி நுட்பங்கள் விளக்கி ஞான
வேட்கையுயிர் எய்தவருள் செய்த ஏந்தல்
நாதர்திருத் ''தேவர்'' திரு அடிகள் சார்ந்து
நயந்திகழும் பேரின்பந் துய்த்த அண்ணல்
உயர்வுடைய பிரம்மசரி யத்தின் மாண்பை
உலகறியச் செய்ததனி ஞான வீரன்
அயர்வில்விவே கானந்த அடிகள் பாத
அருள்மலரின் மணமளைந்து வாழ்கு வோமே.

---

ராகம்—காபி தாளம்—ஆதி

பல்லவி

7. வந்தே விவேகானந்தம் — ஜயஜயேதி (வ)

அனுபல்லவி

வேதாந்த விக்ஞான விவேக தீபம்
விவேக தானைக விநோத சீலம் (வ)

சரணம்

பரமயோக த்யாகசீல பரமவைராக்ய தீபம்
தர்மரூப யதிராஜ ராமக்ருஷ்ண ஸாதனம்
பரமஹம்ஸ தேவதத்த ப்ரேமரூப பாஸ்கரம்
பரமஞான விவேகானந்த ப்ரேமபாவ குருபரம்! (வ)

— ஸ்ரீரங்கானந்தர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்—இந்துஸ்தானி மிஸ்ர தாளம்—ஏக்தால்

( வங்கமொழி )

8 ஸ்வதேச விதேச உஜலி உடிசே
தோமார் நவீன தன்த்ர,
ஆகாச வாதாஸ் த்வனியா துலிசே
தோமார் மோஹன மன்த்ர;
நந்தித – தரா – மந்திர மாஜே
தர்மேர் ஸ்ரக் சுந்த,
மோதேர் விவேகானந்த துமி கோ–
விச்வ விவேகானந்த ॥ (1)

அருண கிரண உச்சலி உடிலோ
உதிலே யே தின வங்கே,
ஸ்வர்க கரிலோ ஸுரபி வ்ருஷ்டி
